**கவனிக்க.-** *2010.07.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி V இல் காலாண்டிற்கான (2007, ஏப்பிறல்-யூன்) புத்தகப் பெயர்ப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1665 - 2010 ජූලි මස 30 වැනි සිකුරාදා - 2010.07.30**

*1665 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1121 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1127 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1128 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1106 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2010, ஓகத்து மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆய விற்பனையும் குத்தகையும்

## லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவின் கள்ளுத் தவறணைகளுக்கான குத்தகை விற்பனை - 2011

2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆந் திகதிவரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள லுணுகலை பிரதேச செயலாளரின் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை செய்வதற்கான நிபந்தனைகளுக்கு அமைவாக 2010.08.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரையில் என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. குத்தகையினை பெற்றுக்கொள்ள முன்வருபவர்கள் இலங்கையில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ளத்தக்கதான குறித்த விண்ணப்பப்படிவத்தினை முறைப்படி பூர்த்தி செய்து இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட வருமான சான்று பத்திரத்துடன் பொறியிடப்பட்ட கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ள தவறணையின் இலக்கத்தினையும், பெயரினையும் தெளிவாக குறிப்பிட்டு அந்த தவறணைக்காகவென இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேரத்திற்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பவோ அல்லது பிரதேச செயலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுவதன் மூலம் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரதாரர்கள் கேள்விப்பத்திர படிவங்களை பூரணப்படுத்தும்போது கேள்வி பத்திரப்படிவத்தில் செய்கின்ற அனைத்து மாற்றங்களையும் தனது பூரண ஒப்பத்தை இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளாகிய 2010.08.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அனைத்து கேள்விதாரர்களும் இந்த பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகம் தர வேண்டும்.

5. ஏதேனும் விடயமொன்றினை குறிப்பிட்டிராத கேள்விப்பத்திரமொன்றினையோ அல்லது அனைத்து கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் லுணுகலை பிரதேச செயலாளருக்குண்டு.

6. முன் குறிப்பிட்ட தினத்தில் குத்தகை விற்பனை செய்யப்படாதவிடத்து அதனை மீண்டும் விற்பனை செய்தல் 2010.10.21 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும். அதற்கான கேள்வி பத்திரங்களைச் சமர்ப்பித்தல் இந்த வர்த்தமானி அறிவித்தலின் தேவைகளிற்கமைவாகயிருத்தல் வேண்டும்.

7. ஒருவர் ஆய உரித்தினை பெற்றுக்கொண்டார் எனப் பிரகடனப்படுத்தப்படின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அவர் லுணுகலை பிரதேச செயலாளரினால் விதிக்கப்படுகின்ற தொகையாக இரண்டு மாத கட்டணத்திற்கு கூடுதலான தொகையை வைப்புப்பணமாக என்னிடம் செலுத்தி தவறணை பற்றிய நிபந்தனைகளுக்கு ஒப்பிடுதல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரம் சமர்ப்பித்தல் சம்பந்தமாக தெரிந்து கொள்ளவேண்டிய வேறு விவரங்களை லுணுகலை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பீ. எஸ். பீ. அபேவர்தன,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
லுணுகலை,
2010.06.24.

### லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளு தவறணை குத்தகை விற்பனை - 2011

(01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரை)

| தொடர் இலக்கம் | தவறணையின் பெயரும் அமைவிடமும் | பிரிவு | பி. செ. பிரிவில் தவறணையின் அமைவிடம் | தவறணை திறக்கப்படுகின்ற நேரம் | தவறணை மூடப்படுகின்ற நேரம் | கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்ற கடைசி தினமும் நேரமும் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | இல. 2-லுணுகலை | லுணுகலை | பசறை பிரதேச சபையின் லுணுகலை உப அலுவலகத்தின் வட்டார இலக்கம் 01 வரிப்பண இலக்கம் 219 கொண்ட குருவிகும்புரவத்த. | மு. ப. 11.00<br>பி. ப. 5.00 | மு.ப. 2.00<br>பி. ப. 8.00 | ரூபா 5000 | 27.08.2010<br>மு. ப. 10.30 |

மாஹதோவ தோட்ட எல்லைக்குள் இரவு நேர சிற்றுண்டிச் சாலைக்கு 2011 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பது தொடர்பான சிபாரிசினை தோட்ட அதிகாரி 2011.08.27 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக லுணுகலை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

7-811

---

## நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2011

1982, ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை நிபந்தனைகள் மற்றும் தற்போதைய எல்லா மதுவரி உத்தரவுப்பத்திரம் சம்பந்தமான ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது நிபந்தனைகள் பிரகாரம் கள்ளு சில்லறை விற்பனைக்கான கீழ்க்காணப்படும் கள்ளுத்தவறணைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் 2011, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2011, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரைக்கான தனி நபர் உரிமைக்கான வெளிவிற்பனைக்குரிய கேள்விப்பத்திரம் 2010.09.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுத்தவறணைக்குரிய கேள்வி விண்ணப்பிப்பவர்கள் இலங்கையின் எந்தப் பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடிய கேள்வி விண்ணப்ப மாதிரி விண்ணப்பப்படிவத்தினை முறையே பூரணப்படுத்தி இங்கு பிரகடனப்படுத்தப்பட்ட கள்ளுத் தவறணைக்காக அனுமதி வழங்கியிருக்கும் பிரகாரம் செயலகத்தில் பணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் கள்ளு கேள்வி ஒப்பந்தப் பிரகாரம் பெற்றுக்கொண்ட தகைமைப்பத்திரத்துடன் சேர்த்து முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு அதன் இடதுபுற மேல் மூலையில் தாங்கள் சமர்ப்பிக்கும் கேள்விக்குரிய கள்ளுக்கடையின் பெயரும் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு முறையே ஒவ்வொரு கள்ளுக்கடைக்குமாக இங்கு குறிப்பிடப்பட்ட கேள்வி சமர்ப்பிக்கும் கடைசி நேரத்திற்கு முன்பாக பதிவுத்தபால் மூலமாக அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இட்டாகிலும் பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விகளைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் கேள்வி விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தும்போது எல்லாவிதமான மாற்றங்களுக்கும் எதிரே தங்கள் பூரண கையொப்பமிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும். அப்படிச் செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினமான 2010.09.24 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு எல்லா விண்ணப்பதாரிகளும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். வெளிநாட்டு குடிவகை குத்தகை 2010.09.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

5. ஏதாவது கேள்விப்பத்திரத்தில் சரியான விபரங்கள் தரப்பட்டிராதவிடத்து விண்ணப்பங்கள் யாவற்றையும் நிராகரிக்கும் உரிமை எனக்குண்டு.

6. ஏற்கனவே மேற்கூறப்பட்ட தினத்தில் விற்பனை செய்யமுடியாத கள்ளுத்தவறணைகள் 2010.11.18 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனை செய்யப்படும் அன்றைய தினம் சமர்ப்பிக்கும் கேள்விகள் வர்த்தமானப்பத்திரிகையில் வெளியிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப அமைதல் வேண்டும். வெளிநாட்டு குடிவகை குத்தகை மீண்டும் விற்பனை செய்வது 2010.11.19 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

7. ஒரு குறிப்பிடப்பட்ட கள்ளுத்தவறணையின் கொள்வனவாளர் என பிரகடனப்படுத்தப்படுகின்ற வெற்றிபெற்ற கேள்விதாரர் விற்பனை தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன்னதாக என்னால் நியமிக்கப்படும் தொகையான மூன்று மாத கேள்விப்பங்குத் தொகைக்கு அதிகமான முற்பணத் தொகையை எனக்கு செலுத்தி கள்ளுக்கடை சம்பந்தமான ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பமிடப்படல் வேண்டும்.

8. கேள்வி சமர்ப்பிக்கும்போது வேறு ஏதாவது விபரங்கள் தேவைப்படுமாயின் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

9. கேள்வி விற்பனை சம்பந்தமாக நான் எடுக்கும் தீர்வே இறுதித் தீர்வாகும்.

டபிள்யு. பீ. எம். ஜீ. ஆர். எஸ். கே. முஹந்திரம்,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
நீர்கொழும்பு,
2010, யூலை 13.

**நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணைக்கான குத்தகை விற்பனை - 2011**

| கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | பிரிவு | கள்ளுத் தவறணை அமைந்திருக்கும் உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்கும் நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூபா | கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதியும் நேரமும் |
|---|---|---|---|---|---|
| 1. இல. 10 - செத்தப்பாடுவ | நீர்கொழும்பு | செத்தப்பாடுவ ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 2. இல. 11 - பசியாவத்தை | நீர்கொழும்பு | பசியாவத்த ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 3. இல. 12 - பிட்டிபனை | நீர்கொழும்பு | பிட்டிபனை ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 4. இல. 15 - குரணை | நீர்கொழும்பு | குரணை ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 5. இல. 16 - காமச்சோடை | நீர்கொழும்பு | காமச்சோடை ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 6. இல. 17 - உடயார்தோப்பு | நீர்கொழும்பு | உடயார் தோப்பு ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 7. இல. 18 - குடாபாடுவ | நீர்கொழும்பு | குடாபாடுவ ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 8. இல. 19 - தளுபத்த | நீர்கொழும்பு | தளுபத்த ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 9. இல. 20 - போருதொட்ட | நீர்கொழும்பு | போருதொட்ட ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 10. இல. 22 - பலங்கதுறை | நீர்கொழும்பு | பலங்கதுறை ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,500 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 11. இல. 21 - கொச்சிக்கடை | நீர்கொழும்பு | கொச்சிக்கடை ஊர் மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2010.09.24 மு. ப. 10.30 |
| 12. இல. 2 - கிரீன்பார் | நீர்கொழும்பு | குன்டன்வில மட்டும் | காலை 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2010.09.27 மு. ப. 10.30 |

7-902

---

**இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை இல. 01 - கள்ளுத்தவறணை ஏலவிற்பனை - 2011**

2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையுள்ள காலஎல்லைக்குள் இங்கு கீழ் அட்டவணையில் காணப்படும் பிரதேசத்தில் கள்ளு சில்லறைக்கு விற்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும் :-

1. 1982.08.20 ஆந் திகதியுடைய இலக்கம் 207 வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத்தவறணை ஏல விற்பனை நிபந்தனைகளின் படியும்.

2. மதுவரிச்சட்ட நிபந்தனையில் காட்டப்பட்டுள்ள எல்லா மதுபான உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

எல்லா விலை மனுக்களையும் பிரதேச செயலகத்தில் அல்லது இலங்கை வங்கியின் "பிரதேச செயலகம் - பலாங்கொடை" எனும் கணக்கில் பணம் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டினைப் பெற்று 1500 ரூபாவினை செலுத்தி "பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணை" எனக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

3. இலங்கையின் எல்லா பிரதேச செயலகங்களிலும் அல்லது கொழும்பு மதுவரி திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட படிவத்தில் விலை மனு உரையையொட்டி (சீல் வைத்து) இடபக்க மேல் மூலையில் "பலாங்கொடை இல. 01 கள்ளுத்தவறணைக்கான விலை மனு" என்று தெளிவாக குறிப்பிட்டு விலை மனு திகதி முடிவடைய முன்பு பலாங்கொடை பிரதேச செயலகத்தின் விலைமனு பெட்டியில் அல்லது "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், பலாங்கொடை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் குறிப்பிட்ட காலத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

4. எல்லா விலை மனுக்காரர்களும் தமது சொந்தப் பெயரிலேயே விலை மனுவை சமர்ப்பித்தல் வேண்டும்.

5. ஒருவர் ஒரு கள்ளுத்தவறணைக்கு மேல் விலை மனு கோரமுடியாத அதே வேளை இருவர் சேர்ந்தும் கள்ளுத்தவறணைக்கு விலை மனு கோரமுடியாது.

6. விலை மனுக்காரரால் குறிப்பிடப்பட்ட விலை மனுவின் தொகை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடப்பட வேண்டும். விலைமனுக்காரர் எல்லா விலை மனுக்களிலும் கையொப்பம், திகதி இடப்பட்டு உறுதிப்படுத்தல் வேண்டும். எல்லா விலை மனுக்களிலும் சாட்சியாளர் இருவரால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். நிபந்தனைகளுக்குட்படாத விலை மனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலை மனுக்கோரலில் வெற்றிபெற்ற மனுக்காரர் விலை மனுவை வாங்கியவராகக் கருதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட பின் பலாங்கொடை பிரதேச செயலகத்தின் நிபந்தனைகளில் கையொப்பமிட்டு பிரதேச செயலாளரால் குறிப்பிடப்படும் பணத்தினை செயலகத்தில் வைப்பிலிட்டு கள்ளுத் தவறணையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

8. 2010.09.08 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை வில மனு ஏற்றுக்கொள்ளப்படும். விலை மனு கோரப்பட்டு முடிவடைந்ததும் விலை மனு பெட்டி திறக்கப்படும். அச்சமயம் எல்லா விலை மனுதாரர்களும் குறிப்பிட்ட நேரத்தில் பலாங்கொடை பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

9. 2010.09.08 ஆந் திகதியன்று குறிப்பிட்ட நேரத்தில் இந்த விலை மனு நடைபெறாவிட்டால் அது மீண்டும் 2010.11.03 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

10. எந்தவொரு விபரமும் காட்டாது விலைமனுவை சொந்த விருப்பின் பேரில் நிராகரிக்கும் உரிமை பலாங்கொடை பிரதேச செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

11. 2011 ஆம் ஆண்டிற்கான தவறணை நடாத்தும் இடத்தில் இடத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்பதனைக் கூறமுடியாது. திறமையான விண்ணப்பக்காரரால் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தின் கட்டிடமொன்றை தேடிக்கொள்ள வேண்டும். அந்த கட்டிடத்திற்காக மதுபான ஆணையாளர் அவர்களின் அனுமதியைப் பெற வேண்டும். கட்டிடத்தைப் பெற்றுக்கொடுக்க ஆணையாளர் உடன்பாடில்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

12. மேலதிக விபரங்களை பலாங்கொடை பிரதேச செயலகத்தில் கேட்டறிந்து கொள்ளலாம்.

ஈ. எஸ். ஜீ. எதிரிசிங்க,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை பிரதேச செயலகம்.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2010, யூலை 12.

**அட்டவணை**

| கள்ளுத்தவறணையின் பெயரும் இலக்கமும் | பிரிவு | அமைவிடம் | கள்ளுத்தவறணை திறக்கப்பட வேண்டிய நேரம் | விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் காலமும் |
|---|---|---|---|---|
| இல. 01 பலாங்கொடை | பலாங்கொடை நகர எல்லை | பலாங்கொடை நகர சபைக்குட்பட்ட பிரதேசம் | மு. ப. 11.00 மணி முதல்- பி. ப. 2.00 மணி வரை பின் பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 2010.09.08 மு. ப. 10.30 |

7-846

**வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளு தவறணைகள் குத்தகை விற்பனை - 2011**

1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதியிட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும், 1983 ஆம் ஆண்டிலும் அதற்கு பிந்திய கால எல்லைகளிலும் இதில் காணப்படும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தவறணைக்கான குத்தகைக்கொடுத்தல் காலப்பகுதியில், இவ்வறிவுறுத்தலுக்கு அமைய 2011 இல் கீழ்க்காணப்படும் கள்ளு தவறணைகள் குத்தகை விற்பனைக்கு தனிநபர்களுக்கான சில்லறை விற்பனைக்கு கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள், 2010.08.16 ஆந் திகதி, அட்டவணையில் குறிப்பிட்ட நேரத்தில் கேள்விப்பத்திரம் வலப்பனை பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) இத்தகவல்கள் இலங்கையில் அனைத்துப் பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரம் கேள்விகள் யாவும் அனுப்பப்படல் வேண்டும் ;

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்த ஒரு பிரதேச அலுவலகத்திலும் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்;

(இ) பிரதேச செயலாளர் வழங்கிய கேள்விதாரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சியும், கேள்வி பத்திரத்துடன் இணைக்கப்படல் வேண்டும். கேள்விகளும் பெறுமதிமிக்க அத்தாட்சிப்பத்திரம், சமர்ப்பிக்கும்போது கள்ளு தவறணைக்கான நிபந்தனைக்குட்பட்டவராக கேள்விக்காரர் இருத்தல் வேண்டும் ;

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விக்காரர் கீழ்க்காணும் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(I) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித் தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும் ;

(II) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பம் இட்டு சாட்சிகளின் அடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும் ;

(III) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும், திகதியையும் இட்டு உறுதிப்படுத்த வேண்டும் ;

(IV) சகல தகவல்களும் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்துடன் கேள்விக்காரர்கள் தமது அடையாள அட்டையையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்து செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப் பத்திரத்திற்கான வைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு பெறுமதி சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரை இடப்பட்ட உறையின் இடதுபக்க மேல்மூலையில் தவறணைக்கான பெயரையும் இலக்கத்தையும் குறிப்பிட்டு வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் கேள்விகள் பெறப்பட வேண்டிய கால எல்லைகளுக்குள் இடப்படல் வேண்டும். தபால் மூலம் கேள்விகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தபாலில் வலப்பனை பிரதேச செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி கால எல்லை கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விகாரர்கள் வலப்பனை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தை ஏற்கவோ நிராகரிக்கவோ வலப்பனை பிரதேச செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனை தினத்தன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் வலப்பனை பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்ட 3 மாத தவணைக்கு மேற்படாத பிணைப்பணமாக வலப்பனை பிரதேச செயலாளருக்கு செலுத்த வேண்டும். மேற்படி வைப்புப்பணம் நில்தண்டாஹின்ன இலங்கை வங்கிக் கணக்கில் பிரதேச செயலாளர் கணக்கின் பெயரால் வைப்புச் செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்படல் வேண்டும். தேவையான முத்திரைகளை செலுத்தி குத்தகைக்காரர் நிபந்தனைகளிலும் ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடல் வேண்டும்.

7. நியமிக்கும் தவணைக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகைமை உடையவர் ஆவார்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

9. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2010.10.11 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் விற்பனை செய்யப்படும்.

10. மேற்படி தவறணைகள் குத்தகை கொடுப்பது சம்பந்தமான இறுதி தீர்மானம் பிரதேச செயலாளருடையதாகும்.

11. தவறணை குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஜீ. கே. ஜீ. ஏ. ஆர். பி. கே. நந்தன,
பிரதேச செயலாளர்,
வலப்பனை.

பிரதேச செயலகம்,
வலப்பனை.
2010.07.12.

**அட்டவணை**

கள்ளுத் தவறணைகள்

| இல. | தவறணையின் பெயர் | தவறணை அமைந்துள்ள இடம் | கேள்விப்பத்திரம் பெறப்படும் கால எல்லையும் நேரமும் | கேள்விப்பத்திர பிணைப்பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | இல. 04- ஹரஸ்பெத்த | ஹரஸ்பெத்த கிராமம் | 2010.08.16 மு. ப. 10.30 | 5,000 |
| 02 | இல. 05- பதியபெலல்ல | பதியபெலல்ல கிராமம் | 2010.08.16 மு. ப. 10.30 | 5,000 |

7-917

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கம்பனி பதிவு சம்பந்தமான பகிரங்க அறிவித்தல் :-

கம்பனியின் பெயர் : ராஜகருணா மோட்டர் டிரேடர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீபி 72536
பதிவு விலாசம் : இல. 380, ஒலிம்பஸ் ரெஸிடன்ட், மிலேனியம் சிட்டி, அத்துருகிரிய

பணிப்பாளர்.

7-937

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : பீ அன்ட் எப் குளோபல் என்டர்பிரைஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72997
பதிவு அலுவலக முகவரி : இல. 273/8, பஹல கரகமுன, கடவத்தை
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010.07.02

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-883

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவுக்கமைய எம்ஜே இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட், பதிவு இலக்கம் பீவீ 15286 மற்றும் எம்ஜே பொனி (பிறைவேட்) லிமிட்டெட், பதிவு இலக்கம் பீவீ 6039 எனும் கம்பனிகள் ஒன்றிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : எம்ஜே இன்டர்நெஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-884

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2010.06.17 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக அறியத்தருகிறோம் :-

கம்பனியின் பெயர் : டிரவல் ஆர்கேட் ஹொலிடேஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72770
பதிவு முகவரி : இல. 102/1, ஹவ்லொக் றோட், கொழும்பு 5

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-885

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : அவுட்ஸ்பேன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 72810
*பதிவு முகவரி* : இல. 17, சார்ள்ஸ் டிரைவ், கொழும்பு 3
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, யூன் 22

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-886

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி 2010.06.17 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதாக அறியத்தருகிறோம் :-*

*கம்பனியின் பெயர்* : கோர்ப்பரேட் வெல்நஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 72769
*பதிவு முகவரி* : இல. 47/6, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

7-887

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (3) (பி) பிரிவின்கீழான அறிவித்தல்

கெஷுவல் ட்ரென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 2690), எக்செல் வாஸ்ட் கழம்பு (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 1767)- கொழும்பு 2, வெக்சோல் வீதி, 255/1 ஆம் இலக்கத்தில் பதியப்பட்ட முகவரியைக் கொண்டுள்ள இந்நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு தமது வர்த்தகத்தை ஒன்றிணைக்கத் தீர்மானித்துள்ளன.

ட்ரென்ட் செட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 1914), பதியப்பட்ட விலாசம் இல. 255/1, வெக்சோல் வீதி, கொழும்பு 2

கெஷுவல் ட்ரென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
எக்செல் வாஸ்ட் கழம்பு (பிறைவேட்) லிமிட்டெட்,
ட்ரென்ட் செட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
ஆளுநர்.

7-890

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் விதிகளுக்கமைய கீழ்க்குறிப்பிடப்படும் கம்பனியானது கூட்டிணைக்கப் படுவதாக அறிவிக்கப்படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : கழம்பு எஸ்ட்ரொலொஜி சென்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 71608
*கூட்டிணைப்புத் திகதி* : 2010.03.23
*கம்பனியின் முகவரி* : இல. 29ஏ, எஸ். டி எஸ். ஜயசிங்க மாவத்தை, களுபோவிலை, தெஹிவளை

கழம்பு எஸ்ட்ரொலொஜி சென்டர்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

7-827

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) பிரவின் பிரகாரம் பொது அறிவித்தல்

*கம்பனியின் பெயர்* : கோல்டன் இஸில் ட்ரெவெல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 73070
*கூட்டிணைப்புத் திகதி* : 2010.07.08
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 17/9எச், லா க்ரஸ்டா, 7 ஆம் லேன், ஸ்ரீ ஞானேந்திரா மாவத்தை, நாவலை

ஜே. ஏ. பானபொக்கே,
பணிப்பாளர்.

7-816

## பொது அறிவித்தல்

கம்பனி பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8(2) விதிகளின் பிரகாரம் 2010, யூன் 02 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது :-

*கம்பனியின் முந்திய பெயர்* : அக்ஸ்டார் கெமிக்கல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 1627
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : இல. 112, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5
*கம்பனியின் புதிய பெயர்* : அக்ஸ்டார் குரொப்கெயா (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

பீ. ஆர். செக்ரடேரியல் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

7-817

## பொது அறிவித்தல்

பெயர் மாற்றஞ் செய்தல்

2010, யூன் 23 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் "ஈகையிஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் நிறுவனம் "சேர்ட்வேர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என பெயர்மாற்றஞ் செய்யப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

1. கம்பனியின் முன்னைய பெயர் : ஈகைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
2. கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 3882
3. பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 28, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 7
4. கம்பனியின் புதிய பெயர் : சேர்ட் வேர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

சபையின் கட்டளைப்படி,

பினான்ஸியல் சேர்விஸஸ் அன்ட் கொமர்ஷியல் ஏஜன்ஸீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

சேர்ட்வேர்க்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

7-848

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 119/4ஏ, கம்சபா வீதி, களனிமுல்ல, அங்கொடை என்ற முகவரியில் வசிக்கும் வெனுரா நந்த பயஸ் தஹநாயக்க ஆகிய நான், 2008.02.07 ஆந் திகதிய 647 ஆம் இலக்கம் கொண்ட பிரசித்த நொத்தாரிசு மனோஜ் நாணயக்கார உறுதிப்படுத்திய இலக்கம் 119/4ஏ, கம்சபா வீதி, களனிமுல்ல, அங்கொடை என்ற முகவரியில் வசிக்கும் குலதுங்க முதியன்சலாகே வாசனா ஜெயதிலக என்பவருக்கு வழங்கிய அற்றோணி அதிகாரப்பத்திரம் இல்லாமல்செய்து இரத்துச் செய்யப்படுகிறது என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

வெனுர நந்த டயஸ் தஹநாயக்க.

7-850

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இல. 47, எலக்ஸ்ஸாண்டிரா பிளேஸ், கொழும்பு 7 என்ற முகவரியில் அமைந்துள்ள அப்சரா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பணிப்பாளரான எரிக் எலிஸ் ஆகிய நான், எனது நிறுவனத்தின் விசேட அற்றோணித் தத்துவக்காரரான முனிதாச ரணவீர பட்டபெந்திகே என்பவரை நியமனம் செய்த 2007, யூன் 23 ஆந் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். வை. நஸார் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1538 கொண்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் இத்தால் இரத்துச்செய்யப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்படுகிறது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

எரிக் எலிஸ்,
பணிப்பாளர்.

அப்சரா ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
2010.07.05.

7-851

---

## கூட்டிணைப்பிற்கான பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் உபபிரிவு (1) இன் பிரகாரம் கீழ்குறிப்பிடப்படும் கம்பனியானது கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் பகிரங்க அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. கோகிறீன் லிமிட்டெட் ஆனது கம்பனி இல. பீவீ 3797 இன்கீழ் 2010, பெப்புருவரி 1 ஆந் திகதி கூட்டிணைக்கப்படுகிறது. அதன் பதிவு அலுவலகம் கொழும்பு 7, தர்மபால மாவத்தை, இல. 181 ஆகும்.

சார்ட் பிஸினஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

7-845

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட சரத்து 346(1) இன் கீழான ஏசியா இன்டஸ்றியல் என்டபிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனியின் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பதிவு இல. : என் (பீவீஎஸ்) 9127/பீவீ 14812

கம்பனியின் பெயர் : ஏசியா இன்டஸ்றியல் என்டபிரைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : பகுதி I, முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கட்டுநாயக்க
நீதிமன்றம் : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இலக்கம் : எச்சீ (சிவில்) 51/2009/சீஓ
கம்பனி கலைப்பாளரின் பெயர் : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
முகவரி : மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், லெவெல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4
நியமன திகதி : 2010.04.01

7-876/1

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்ட சரத்து XII இன் கீழான கம்பனி கலைப்பு அறிவித்தல்**

ஏசியா இன்டஸ்றியல் (பிறைவேட்) லிமிட்டெட்

கம்பனியின் பதிவு இல. : என் (பீவீஎஸ்) 9127/பீவீ 14812

*கம்பனியின் பெயர்* : ஏசியா இன்டஸ்றியல் என்டபிரைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : பகுதி I, முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கட்டு நாயக்க
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இலக்கம்* : எச்சீ (சிவில்) 51/2009/சீஓ
*நீதிமன்ற கட்டளைத் திகதி* : 2010.04.01
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி* : 2009.10.02
*கம்பனி கலைப்பாளரின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
*முகவரி* : மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், இல. 2, காசல் லேன், கொழும்பு 4

7-876/2

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டப்படி பகுதி XII இன் கீழான கம்பனி கலைப்பு மற்றும் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

கம்பனியின் பதிவு இல. : என் (பீவீஎஸ்) 21377

*கம்பனியின் பெயர்* : ஏசியாசொப்ட் லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 46/7, 3 ஆம் மாடி, வேலியன்ட் டவர்ஸ், நவம் மாவத்தை, கொழும்பு 2
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இலக்கம்* : எச்சீ (சிவில்) 28/2009/சீஓ
*நீதிமன்ற கட்டளைத் திகதி* : 2009.09.30
*கோரிக்கை தாக்கல் செய்த திகதி* : 2009.05.27
*கம்பனி கலைப்பாளர்களின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
*முகவரி* : மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், ரீஸ்ரக்சர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி, லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4

7-877/1

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்ட சரத்து 346(1) இன் கீழான ஏசியாசொப்ட் லிமிட்டெட் எனும் கம்பனியின் இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

கம்பனியின் பதிவு இல. : என் (பீவீஎஸ்) 21377

*கம்பனியின் பெயர்* : ஏசியாசொப்ட் லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : இல. 46/7, 3 ஆம் மாடி, வேலியன்ட் டவர்ஸ், நவம் மாவத்தை, கொழும்பு 2
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இலக்கம்* : எச்சீ (சிவில்) 28/2009/சீஓ
*கம்பனி கலைப்பாளர்களின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
*முகவரி* : மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், ரீஸ்ரக்ச அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி, லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4
*நியமன திகதி* : 2010.02.05

7-877/2

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்ட சரத்து 298(1) இன் கீழான ஹாரெக்ஸ் இன்டஸ்றீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனியின் இணை கலைப்பாளர் விடுவிப்பு பற்றிய அறிவித்தல்**

கம்பனியின் பதிவு இல. : என் (பீவீஎஸ்) 2241

*கம்பனியின் பெயர்* : ஹாரெக்ஸ் இன்டஸ்றீஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி* : த. பெ. இல. : 8, ஏற்றுமதி பதனப்படுத்தும் வலயம், பியகம
*நீதிமன்றம்* : வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
*வழக்கு இலக்கம்* : எச்சீ (சிவில்) 03/2008/சீஓ
*கம்பனி கலைப்பாளர்களின் பெயர்* : பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்
*முகவரி* : மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ், லெவல் 4, இல. 2, காசல் லேன், கொழும்பு 4
*நியமன திகதி* : 2010.06.23

7-878

### 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

பதிவிலக்கம் பீவீ 72965 என்பதைக் கொண்டதும், இலக்கம் 10, கோதமி வீதி, கொழும்பு 8 என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான கம்பனியொன்று வைல்ட் சிலோன் (பிறைவேட்) லிமிட்டெட் என்னும் பெயரில் 2010 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதியன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

2010, ஆடி 7.

பணிப்பாளர்.

7-879

---

### 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

பதிவிலக்கம் பீவீ 72994 என்பதைக் கொண்டதும், இலக்கம் 4/8, எலி பான்க் வீதி, கொழும்பு 5 என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான கம்பனியொன்று எல். எம். ஜினசேன ஹோட்டல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்னும் பெயரில் 2010 ஆம் ஆண்டு ஆடி மாதம் 2 ஆந் திகதியன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பணிப்பாளர்,
எல். எம். ஜினசேன ஹோட்டல்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.

2010.07.09.

7-880

---

### 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்

பதிவிலக்கம் பீவீ 72701 என்பதைக் கொண்டதும், இலக்கம் 377/2, மகர வீதி, கடவத்தை என்னும் முகவரியில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான கம்பனியொன்று ஏசியா மனேஜ்மென்ட் கொன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட் என்னும் பெயரில் 2010 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதியன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றது.

பணிப்பாளர்.

2010, ஆடி 07.

7-881

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பி பிக் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72861
பதிவு முகவரி : இல. 50/6/1, லில்லி அவெனியு, கொழும்பு 6
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2010, யூன் 24

அ. ராஜமோகன்,
கம்பனிச் செயலாளர்.

7-985

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்ச்சரா (பிறைவேட்) லிமிட்டெட் 2010, யூன் 10 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : கல்ச்சரா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 71952
கம்பனி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 37, 1/5, சாகர வீதி, கொழும்பு 4

சபையின் கட்டளைப் பிரகாரம்,

வீ. கதுறுகமுவ,
செயலாளர்.

கல்ச்சரா (பிறைவேட்) லிமிட்டெட்.

7-984/3

---

### அறிவித்தல்

ஜீ. ஜீ. எல். லைன் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற நிறுவனம் ஃப்ரைஹற் சிஸ்டெம்ஸ் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் உடன் ஒன்றிணைத்தல்

ஜீ. ஜீ. எல். லைன் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற நிறுவனம் ஃப்ரைஹற் சிஸ்டெம்ஸ் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் உடன் ஒன்றிணைத்தல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது எனவும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(1) (ஆ) விதிகளுக்கமைய 2010, யூன் 11 ஆந் திகதி கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒன்றிணைத்தல் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

ஒன்றிணைக்கப்பட்ட கம்பனியாகிய ஃப்ரைஹற் சிஸ்டெம்ஸ் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் இன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் இயங்கவுள்ளது.

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

(ஃப்ரைஹற் சிஸ்டெம்ஸ் லொஜிஸ்டிக்ஸ்
லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்).

7-984/2

---

### அற்றோணி அதிகாரப்பத்திரத்தை இரத்துச்செய்தல்

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. எம். பைஸால் என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2002.03.16 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி அதிகாரப்பத்திர இல. 4828 இன் ஊடாக கொழும்பு 7, ப்ளவர் அவெனியு, இல. 5 ஐச் சேர்ந்த வன்ஸவத்தி வயலட் டி பொன்சேக்கா என்பவருக்கு கொழும்பு 05, ஹெவ்லொக் வீதி, இல. 146/18 இல் வசிக்கும் அனில் சனத் டி பொன்சேக்கா குணவர்ன ஜயசூரிய ஆகிய என்னால் வழங்கப்பட்ட மேற்படி அதிகாரப்பத்திரத்தை நான் 2010, யூலை 16 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்து செல்லுபடியற்ற தாக்கியுள்ளேன் என்பதையும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆகவே, 2010, யூலை 16 ஆந் திகதி தொடக்கம் இது அமுலில் இல்லை அல்லது செல்லுபடியானதல்ல என்பதனால் மேற்கூறப்பட்ட அற்றோணி அதிகாரப்பத்திரத்தினூடாக மேற்கூறப்பட்ட வன்ஸவத்தி வயலட் டி பொன்சேக்கா என்பவரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல.

அனில் சனத் டி பொன்சேக்கா குணவர்ன ஜயசூரிய.

2010, யூலை 16.

7-970

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் கெம்பிஓ சொப்ட்வெயார் என்ஜினியரிங் (பிறைவேட்) லிமிட்டெட் 2010, மாச்சு 3 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : கெம்பிஓ சொப்ட்வெயார் என்ஜினியரிங் (பிறைவேட்)
கம்பனியின் இலக்கம் : பீவீ 71340
பதியப்பட்ட அலுவலகம் : இல. 216, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கோர்ப்பரேட் சர்வீசஸ் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

கெம்பிஓ சொப்ட்வெயார் என்ஜினியரிங் (பிறைவேட்),
பணிப்பாளர்.

7-984/1

---

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்

கம்பனியின் பெயர் : பீச் பரடைஸ் ஈஸ்ட் கொஸ்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 72952
பதிவுத் திகதி : 2010.07.01
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 181/18, ஹைலெவல் றோட், கொழும்பு 06

அஹமட் அப்துல் அலீம் சித்தீக்,
பணிப்பாளர்/கம்பனிச் செயலாளர்.

இல. வீ/2/1, அண்டர்சன் தொடர் மாடி,
பாக் வீதி,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5.

7-1003

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைத்தல்

"கார்ரஷ் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது 2010, யூலை 12 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கமைய இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : கார்ரஷ் (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைத்தல் திகதி : 2010.07.12
கம்பனியின் இலக்கம் : பீவீ 73133
பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 22, மசூர் மாவத்தை, தர்கா நகர்

சபையின் கட்டளைப்படி,

பினான்ஷியல் சேர்விஸஸ் அன்ட்
கொமர்ஷியல் ஏஜென்ஸீஸ்
பிறைவேட் லிமிட்டெட்,
செயலாளர்கள்.

7-995

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

## நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணைகள், வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் குத்தகை விற்பனை – 2011

*1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1983 ஆம் வருடத்திலும் அதற்குப் பின்னரான காலத்திலும் நடைமுறையில் உள்ளவாறான கள்ளு, வெளிநாட்டு குடிவகை தவறணைகள் உத்தரவுப்பத்திரம் சம்பந்தமாக கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய 2011 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல்.*

இக்காலப்பகுதியில் கள்ளு, வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள் (தானிய வகைகளைக் கொண்டு இந்நாட்டில் தயாரிக்கப்படும் குடிவகை உட்பட) தனி நபருக்காக சில்லறை விற்பனை குத்கைக்குக் கொடுப்பதற்கான உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விகள் 2010.09.09 ஆந் திகதி அட்டவணையில் குறிப்பிட்ட நேரம்வரையும் கேள்விப்பத்திரம் நுவரெலியா பிரதேச செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) இத்தீவின் பிரதேச செயலாளர் செயலகத்தில் பெறப்படும் குறிப்பிட்ட படிவத்தில் மாத்திரமே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) அட்டவணையில் குறிப்பிட்ட தொகையை எந்தவொரு பிரதேச செயலகத்திலாவது செலுத்தி அதன் பற்றுச்சீட்டினை இணைத்தல் வேண்டும்.

(இ) பிரதேச செயலாளரால் வழங்கிய கேள்விக்காரரின் அசைவற்ற ஆதனங்களின் பெறுமதிக்கான அத்தாட்சிப்பத்திரம் சமர்ப்பிக்கும்போது, கள்ளுத்தவறணைகளினது வெளிநாட்டுக் குடிவகை குத்தகைக்கான நிபந்தனைகளுக்குட்பட்டவராக கேள்விகாரர் இருத்தல் வேண்டும்.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும்போது கேள்விக்காரர் கீழ்க்காணும் முக்கியத்துவங்களை கருத்திற்கொள்ள வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் கையொப்பமிடும் சாட்சிகளது ஆளடையாள அட்டையின் இலக்கத்தையும் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) கேள்விப்பத்திரத்தில் ஏதாவது திருத்தங்கள், மாற்றங்கள் செய்யப்படின் கேள்விக்காரரின் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv) ஒவ்வொரு கேள்விக்காரர்களும் தமது அடையாள அட்டையை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்படாத பட்சத்தில் கேள்விகள் இரத்துச்செய்யப்படும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரம், கேள்விப்பத்திரத்திற்கான வைப்புச் செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, பெறுமதிச் சான்றிதழ் ஆகியவற்றுடன் முத்திரையிடப்பட்ட உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணைக்கான பெயரையும் தவறணைக்கான இலக்கத்தையும் குறிப்பிட்டு நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் கேள்விகள் சமர்ப்பிக்கவேண்டிய கால எல்லைக்குள் போடப்படல் வேண்டும். தபாலில் கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் குறிப்பிட்ட கால எல்லை முடிவதற்குள் பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் நுவரெலியா பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிக் கால எல்லை கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தருணத்தில் கேள்விக்காரர்கள் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ எனக்கு அதிகாரம் உண்டு.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் விற்பனைத் தினத்தன்று பி. ப. 2.00 மணிக்கு முன் நுவரெலியா பிரதேச செயலாளரால் தீர்மானிக்கப்பட்டு மூன்று மாத விற்பனைக்கு குறையாத பிணைப்பணமாக நுவரெலியா பிரதேச செயலாளருக்கு செலுத்துதல் வேண்டும். மேற்படி வைப்புப்பணம், நுவரெலியா இலங்கை வங்கியில் ஒரு வருட நிரந்தர சேமிப்புக்கணக்கில் எனது பெயரால் வைப்புச்செய்ய குத்தகையாளர் சம்மதிக்க வேண்டும். மேற்படி பிணைப்பணம் காசாக அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் கொடுக்கப்படும் பாதுகாப்பான காசோலை மூலமாக செலுத்தப்பட வேண்டும்.

7. நியமிக்கும் தவணைப்பணக் கட்டணம் மாதாந்தம் காசாக செலுத்துபவர் மட்டுமே, கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் தகைமையுடையவராவர்.

8. கேள்விப்பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரி தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

*9. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத தவறணைகள் 2010.11.04 ஆந் திகதி மு. ப. 10.30 மணியளவில் மீள விற்பனை செய்யப்படும்.*

*10. மேற்படி தவறணைகள் குத்தகைக்கு கொடுப்பது சம்பந்தமான முடிவான தீர்மானம் என்னுடையதாகும்.*

*11. தவறணைகள் குத்தகை பற்றிய மேலதிக விபரங்கள் நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.*

*காமினி இலங்கரத்ன,*
*பிரதேச செயலாளர்,*
*நுவரெலியா.*

*பிரதேச செயலகம்,*
*நுவரெலியா,*
*2010.07.12.*

**அட்டவணை**

**வெளிநாட்டு குடிவகைத் தவறணைகள்**

| தவறணையின் பெயர் | தவறணை அமைக்க வேண்டிய இடம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதித் திகதி | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப் படும் இறுதி நேரம் | கேள்விகள் வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| இல. 01, நுவரெலியா | நுவரெலியா மாநகர சபை இல. 06 பிரிவிற்குள் | 2010.09.09 | மு. ப. 10.30 | ரூ. 5,000 |

*7-918*

# ஏல விற்பனைகள்

## டீஎப்சீசீ வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துஏல விற்பனை**

***3338 ஆம் இலக்க அடைமான பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விவரணம்***

***மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்குப் பிரிவு, வகபனஹ பல்லேசிய பத்து, ரத்மல்கஹ-எல கிராமத்தில் அமைந்துள்ள ரொட்டகொல்ல-யாய என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அனுரரத்ன அவர்களால் வரையப்பட்ட 2005 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 2964 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01ஏபி எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப் பட்டதுமான காணி அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக (மேற்குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் துண்டு 01ஏஏ தவிர்ந்த காணி)***

***(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 0றூ. 18பே.)***

***இது பின்வரும் காணியின் பிரிக்கப்பட்ட பகுதியாகும் :***

***மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்குப் பிரிவு, வகபனஹ பல்லேசிய பத்து, தித்தவெல்கொல்ல கிராமத்தில் அமைந்துள்ள ரொட்டகொல்ல-யாய என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். அனுரரத்ன அவர்களால் வரையப்பட்ட 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதியிடப்பட்ட 2630 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01ஏ எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி அதிலுள்ள கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக***

***(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 0றூ. 27பே.)***

*(பிரசித்த நொத்தாரிசு எஸ். கே. என். ஏ. குரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதியிடப்பட்ட 3338 ஆம் இலக்க முதன்மை பிணை உறுதி மூலம் அனுராதபுரத்தில் 'எல். வீ. பீ. பெரேரா அன்ட் சன்ஸ்' எனும் பெயரில் தனியுரிமைத்துவத்துடன் வியாபாரத்தை நடத்திவரும் லொக்கு விதானகே டக்ளஸ் பெரேரா என்பவரால் டீஎப்சீசீ வர்தன வங்கிக்கு அடகுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

*டீஎப்சீசீ வர்தன வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் வற் வரி 12% (பன்னிரண்டு சதவீதம்) ;
(3) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(5) மொத்த விளம்பரச் செலவான ரூ. 35,000 ;
(6) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சிசி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட,
நூற்றாண்டுக்கும் மேல் மக்கள் நன்மதிப்புப்பெற்ற
இலங்கையின் பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித் தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

7-910

---

### டீஎப்சிசீ வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துஏல விற்பனை**

***1981 மற்றும் 13384 ஆம் இலக்க அடைமான பிணை உறுதிகள் மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விவரணம்***

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தின் குளியாப்பிட்டி பதிவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டுகம்பளை கோரளே தெற்கு, கட்டுகம்பளை, ஹத்பத்து, துணகதெனியவில் அமைந் துள்ள ''துணகதெனிய எஸ்ட்டேட்'' என அழைக்கப்படுவதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். டி. கருணாசேன அவர்களால் வரையப்பட்டு, 2003, மே 25 ஆந் திகதியிடப்பட்ட 39 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 எனக் குறிப்பிடப்பட்டது மான காணி அதன் மீது நிலைத்திருக்கும் அனைத்தும் உள்ளடங்கலாக பாதை உரிமையுடன்**

**(காணியின் விஸ்தீரணம் : 2ஏ. 0றூ. 15பே.)**

*(குருநாகல் பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. வந்துரகல அவர்களால் 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 13384 ஆம் இலக்க மற்றும் குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ரீ. எஸ். ஐ. வெத்தேவ அவர்களால் 2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதியன்று உறுதிப்படுத்தப்பட்ட 1981 ஆம் இலக்க பிணை உறுதிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியதால், 'லஹிரு பதம்கல ஹுணு நிஷ்பாதகயோ' என்ற பெயரில் வியாபாரத்தை தனி உரிமைத்துவத்துடன் நடத்திவரும் தும்மோதரயைச் சேர்ந்த ரண்கொத் பெடிகே சந்தகெலும் லலன குமார அமரவன்ச என்பவரால் டீஎப்சிசீ வங்கிக்கு அடகுவைக்கப்பட்ட சொத்து.)*

டீஎப்சிசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் வற் வரி 12% (பன்னிரண்டு சதவீதம்) ;
(3) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(5) மொத்த விளம்பரச் செலவான ரூ. 36,000 ;
(6) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சிசி வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையின் பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித் தரகர்.

*கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜெனிவிச் பியுமினி ரணசிங்கவினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட இங்கு இதன் பின் "பிணைப்பத்திரம்" என்று அழைக்கப்படும் இல. 375 மற்றும் 2005, திசெம்பர் 14 ஆந் திகதி கொண்ட அடகுப் பிணைப்பத்திரப்படி நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ இடம் கிடைக்கவேண்டிய கட்டணம் செலுத்துவதை தூனகஹ புஷ்பாராம மாவத்தையில் குடியிருக்கும் வர்ணகுலசூரிய படபெந்திகே நலின் தரங்க என்பவர் கட்டுப்பட்டு செலுத்தத் தவறியுள்ளபடியால் மேற்படி அடகு பிணைப் பத்திரத்தின் கீழ் அடகுவைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள், மேற்படி வங்கியினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 23 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் இதனை விற்பனை செய்வேன்.*

***பிரேரணை இணக்கம் தொடர்பான அறிவித்தலுக்காக.-*** *2009.10.30 ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளையும், 2009.10.30 ஆந் திகதி கொண்ட அரச வர்த்தமானப் பத்திரிகையையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏலவிற்பனை முடிந்தவுடன் கொள்வனவு செய்யும் நபர் அத்தருணத்திலேயே கட்டணங்களை கீழ்க்காணும் வகையில் ஏலதாரருக்கு காசாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு செய்யும் கட்டணத்தின் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூராட்சி சபை கட்டணமாக 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்காக நொத்தாரிசு செலவினங்கள் இரண்டாயிரம் ரூபாவாகும் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கோஷம் எழுப்பும் நபருக்கான சம்பளம் ;
(6) ஏலவிற்பனைக்காக ஏலதாரரினால் செலவிடப்பட்ட சகல பிரச்சார செலவுகள் ;
(7) கொள்வனவு செய்யும் தொகுதியின் மிகுதி 90% (நூற்றுக்கு தொண்ணூறு) விற்பனை செய்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கொழும்பு 15, கொட்டாஞ்சேனை, சேர். இராமநாதன் மாவத்தை, இல. 256 என்ற இடத்தில் அமைந்துள்ள நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ இடம் வைப்புச் செய்ய வேண்டும்.
(8) ஏதேனும் காரணத்தால் மிகுதித் தொகை குறித்த திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக செலுத்த கொள்வனவு செய்யும் நபர் தவறும் பட்சத்தில் கொள்வனவு செய்யும் தொகையின் 10% (நூற்றுக்கு பத்து) கழித்து மீண்டும் மேற்படி சொத்துக்களை விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

*உரித்து உறுதிகளையும் மற்றும் ஏனைய ஆவணங்களையும், ஏனைய தகவல்கள் பெறுவதற்காகவும்.-* ''முகாமையாளர்-பாவனையாளர் மற்றும் சட்ட விவகாரம், நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ., இல. 256, சேர். ராமநாதன் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 15'' உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 077-3918733, 011-4682403.

ஐ. சீ. ஏ. பெரேரா,
சமாதான நீதவான், நீதிமன்ற ஆணையாளர்,
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 86, புதுகண்டி வீதி,
வெலிவேரிய.
தொலைபேசி இல. : 033-2255115, 077-3698690.

7-935

---

## நேஷன் ட்ரஸ்ட் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் கடுவெல பிரதேச சபை எல்லையில் பத்தரமுல்ல, கெமுனு மாவத்தையில் அமைந்துள்ள நாரங்கஹாஹேன என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. சீ ஹீன்தெனியவினால் 2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 2 ஆந் திகதி வரைந்து தயாரிக்கப்பட்ட இல. 2526 கொண்ட வரைபடப்படி சொத்து வரி இல. 32/04 என்ற வகையில் பிரித்து நிர்ணயிக்கப்பட்ட துண்டு 1 (அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் ஜீ. பீ. அபேநாயக்கவினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 3289 கொண்ட வரைபடமும் 2003 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதி கொண்ட வரைபடத்தில் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 20ஏ என்ற காணியை மீண்டும் பிரித்து நிர்ணயிப்பதற்கான) கொண்ட காணித்துண்டும் அதற்குச் சொந்தமான சகலவற்றுடனும்**

### ஏல விற்பனை

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 14.44பே.)**

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஹெந்த விதாரணகே சந்ரகுமார் த சில்வாவினால் எழுதி உறுதிசெய்யப்பட்ட இங்கு இதன் பின் ''பிணைப்பத்திரம்'' என்று அழைக்கப்படும் இல. 327 மற்றும் 2005, யூலை 1 ஆந் திகதி கொண்ட அடகுப் பிணைப்பத்திரப்படி மேற்படி ஆதனத்தை பொரலஸ்கமுவ, திவுலபிட்டிய, பெல்லன்வில றோட்டில் இல. 30/3 என்ற இலக்கத்தில் குடியிருக்கும் ஒட்ரி லொரேட்டா த சில்வா அபேவீர குணசேகர என்பவர் அடகுவைத்து மேற்படி நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ இடம் கிடைக்கவேண்டிய கட்டணம், வசந்த அநுரசாந்த த சில்வா அபேவீர குணசேகரவும் மேற்படி ஒட்ரி லொரேட்டா த சில்வா அபேவீர குணசேகர ஆகியோர் கூட்டாக இணைந்து செலுத்தப்படாமல் இருப்பதால் மேற்படி அடகு பிணைப் பத்திரத்தின்கீழ் அடகுவைக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள், மேற்படி வங்கியினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் இதனை விற்பனை செய்வேன்.

**பிரேரணை இணக்கம் தொடர்பான அறிவித்தலுக்காக**.- 2010.06.24 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலண்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளையும், 2010.06.24 ஆந் திகதி கொண்ட அரச வர்த்தமானப் பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- ஏலவிற்பனை முடிந்தவுடன் கொள்வனவு செய்யும் நபர் அத்தருணத்திலேயே கட்டணங்களை கீழ்க்காணும் வகையில் ஏலதாரருக்கு காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யும் கட்டணத்தின் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) உள்ளூராட்சி சபை கட்டணமாக 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்காக நொத்தாரிசு செலவினங்கள் இரண்டாயிரம் ரூபாவாகும் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கோஷம் எழுப்பும் நபருக்கான சம்பளம் ;
(6) ஏலவிற்பனைக்காக ஏலதாரரினால் செலவிடப்பட்ட சகல பிரச்சார செலவுகள் ;
(7) கொள்வனவு செய்யும் தொகுதியின் மிகுதி 90% (நூற்றுக்கு தொண்ணூறு) விற்பனை செய்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், கொழும்பு 15, கொட்டாஞ்சேனை, சேர். இராமநாதன் மாவத்தை, இல. 256 என்ற இடத்தில் அமைந்துள்ள நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ இடம் வைப்புச் செய்ய வேண்டும்.
(8) ஏதேனும் காரணத்தால் மிகுதித் தொகை குறித்த திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக செலுத்த கொள்வனவு செய்யும் நபர் தவறும் பட்சத்தில் கொள்வனவு செய்யும் தொகையின் 10% (நூற்றுக்கு பத்து) கழித்து மீண்டும் மேற்படி சொத்துக்களை விற்பனை செய்ய வங்கிக்கு உரிமை உண்டு.

உரித்து உறுதிகளையும் மற்றும் ஏனைய ஆவணங்களையும் பார்வையிடவும், ஏனைய தகவல்கள் பெறுவதற்காகவும்.- "முகாமையாளர்-பாவனையாளர் மற்றும் சட்ட விவகாரம், நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ., இல. 256, சேர். ராமநாதன் மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு 15" உடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 077-3918733, 011-4682403.

ஐ. சீ. ஏ. பெரேரா,
சமாதான நீதவான், நீதிமன்ற ஆணையாளர்,
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 86, புது கண்டி வீதி,
வெலிவேரிய.
தொலைபேசி இல. : 033-2255115, 077-3698690.

7-936

---

**ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. – செட்டித்தெரு கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என அறியப்பட்ட)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க ஆதனம் ஏல விற்பனை**

*(கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயவர்தன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008, மே 29 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 3176 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள கடப்பாடுடையவரான செல்லமுத்து ரவீந்திரன் இனால் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இன் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2010, மாச்சு 11 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 2009, ஓகத்து 21 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009, ஓகத்து 20 ஆந் திகதிய "ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**அட்டவணை**

பம்பலப்பிட்டியில் அமைந்துள்ளதும் வட்டார இல. 38, பென்டெனிஸ் அவெனியு என முன்னர் அழைக்கப்பட்ட அப்துல் கபூர் மாவத்தை, வரிமதிப்பு இல. 12/7 ஐத் தற்போது கொண்டதும் "சிறிநிகேத்த" என்ற "பென்டெனிஸ்" என அழைக்கப்பட்ட காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. குணவர்தன அவர்களால் தயாரிக்கப்பட்டு 1982, பெப்புருவரி 09 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 131 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 7பே.)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கொள்ளுப்பிட்டியில் காலி வீதி மற்றும் அப்துல் கபூர் மாவத்தை சந்தியிலிருந்து அப்துல் கபூர் மாவத்தை வழியே ஏறக்குறைய 75 மீற்றர் தூரம் சென்று வலப்பக்கம் திரும்பி 20 அடி அகல தனியார் வீதி வழியே மேலும் 35 மீற்றர் சென்று, 20 அடி அகல வீதியின் இறுதியில் வலப்பக்கம் திரும்பி, 10 அடி அகல உட்புகு வீதி வழியே இவ்வாதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 10 மீற்றர் செல்லவும். இவ்வாதனம் ஆர். ஏ. டீ மெல் மாவத்தையிலிருந்து ஏறக்குறைய 125 மீற்றருக்கு அப்பால் உள்ளது.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தற் கட்டணம் ;
(5) முத்திரைக் கட்டணம் ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் சம்பளங்கள் ;
(7) மொத்த விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இல் வைப்பிலிட வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு**.- உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 10, ரீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479, தலைமை அலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க., அறவீடுகள் பகுதி, சிரேட்ட முகாமையாளர் - அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2664664, 2661826.

ஹேமசந்திர தலுவத்த,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 99, ஹல்ஸ்ரோப் தெரு,
கொழும்பு 12,
துரித அழைப்பு : 071 4175944.

7-993

**வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ — கஹவத்த கிளை**

(தற்போது ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. என அறியப்படுகிறது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

*(இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். சீ. ஆர். டி. ராஜபக்ஷ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007. ஒற்றோபர் 04 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 267 மற்றும் இரத்தினபுரியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எஸ். எச். கொஸ்கொடகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, யூன் 9 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 749 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ள ஈடுவைத்தவரான லக்ஷிக்க ஏரந்தி அபேசிங்ஹ விஜேரத்ன மற்றும் கடப்பாடுடையவரான லக் ரீ (பிறைவேட்) லிமிட்டெட் ஆகியோரினால் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு ஈடுவைக்கப் பட்டுள்ள ஆதனம்)*

ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் கீழே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2010, ஓகத்து 26 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2009, யூலை 17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009, யூலை 27 ஆந் திகதிய ''ஜலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினகரன்' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

***அட்டவணை***

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை. பள்ளேபற்று, தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகரசபை எல்லைகளுக்குள் நெதிமாலையில் அமைந்துள்ளதும் தெஹிவளை, கற்குழி வீதி, வரிமதிப்பு இல. 262/1 ஐக் கொண்டதும் ''கஹட்டகஹவத்த-மாறகஹவத்த மற்றும் மீகஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உள்ளிருந்தும் புறமுமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. வீரக்கொடி அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998.02.05 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 569ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 5பி என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 12.5பே.)

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஆர். பி. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1966.12.22 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 162 இல் துண்டு 25 (20 அடி அகல வீதிக்கான ஒதுக்கு) என அடையாளமிடப்பட்டதுமான வீதி ஒதுக்கு வழியேயும் மீதுமான வழியுரிமையுடன் சேர்த்து.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தற் கட்டணங்கள் ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் சம்பளங்கள் ;
(6) மொத்த விளம்பரச் செலவுகள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

**மேலதிக விபரங்களுக்கு.**- உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் ''கொழும்பு 10, ரீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479, தலைமை அலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க., அறவீடுகள் பகுதி, சிரேட்ட முகாமையாளர் - அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2661835, 2661826.

ஹேமசந்திர தலுவத்த,
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற
ஏலதாரர் மற்றும் விலைமதிப்பிடுநர்.

இல. 99, ஹல்ஸ்ரோப் தெரு,
கொழும்பு 12,
துரித அழைப்பு : 071-4175944, 078-7805624.

7-994

---

***சம்பத் வங்கி ப.வ.க.***

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**ஆதனம் மற்றும் வளவுகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1042 5004 0032 - என். ஏ. ஜே. டி. குமார

2009.11.27 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியிலும் 2009.11.23 ஆந் திகதியிடப்பட்ட ''ஜலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினக்குரல்'' எனும் பெயரிலான பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 2009, பெப்புருவரி 18 ஆந் திகதியிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, பதினெட்டு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து நூற்றுஐம்பத்தொன்பது ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 18,55,159.37) கொண்ட தொகையை 2008, திசெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை பதினேழு இலட்சத்து

ஐம்பத்திரண்டாயிரத்து இருநூற்றெழுபது ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 17,52,270.57) கொண்ட தொகை மீது ஆண்டிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து (12.5%) வீத வட்டியுடனும், சேர்த்து உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2010.08.31 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகமை நகர சபையினுள், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்று, ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவினுள், ருக்மலேயில் அமைந்துள்ளதும், "ஹெட்டியாவத்த என்ற ருக்மலே வத்த என்ற வெல்கம் வத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ரீ. சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 1983, மாச்சு 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 82 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 457 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து அதற்கு சொந்தமான எல்லா உரிமைகள், வழிகள், சலுகைகள், அனுபவிக்கும் உரிமைகள், ஆட்சி உரிமைகள் மற்றும் ஆதார உரிமைகள் ஆகியவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 457 இன் எல்லைகளாவன - வடக்கு :துண்டு 454 ; கிழக்கு : துண்டு 456 மற்றும் 455 ; தெற்கு : ஈ. நொரிஸ் அப்புஹாமியினால் உரிமைகோரப்படும் நொரிஸ்வத்த ஆதனம்; மேற்கு : துண்டு 458. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 82 இற்கமைய ஒன்பது சதம் ஐந்து சைவர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 9.50பே.) விஸ்தீரணமுடையது; ஹோமாகம காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 1377/289 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட ருக்மலேயில் அமைந்துள்ளதும், "ஹெட்டியாவத்த என்ற ருக்மலே வத்த என்ற வெல்கம் வத்த" என அழைக்கப்படும் காணியின் சொல்லப்பட்ட வரைபடம் இல. 82 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 458 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள், மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து அதற்கு சொந்தமான எல்லா உரிமைகள், வழிகள், சலுகைகள், அனுபவிக்கும் உரிமைகள், ஆட்சி உரிமைகள் மற்றும் ஆதார உரிமைகள் ஆகியவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 458 இன் எல்லைகளாவன - வடக்கு :துண்டு 454 ; கிழக்கு : துண்டு 457 ; தெற்கு: ஈ. நொரிஸ் அப்புஹாமியினால் உரிமைகோரப்படும் நொரிஸ்வத்த ஆதனம்; மேற்கு : துண்டு 459. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 82 இற்கமைய ஆறு தசம் ஒன்பது ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.97பே.) விஸ்தீரணமுடையது; ஹோமாகம காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 1377/290 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனி செயலாளர்.

7-1010/2

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

### சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை

கணக்கு இல. : 1030 5316 0600-டபிள்யூ. எம். எப். பீ. எஸ். பெர்ணாண்டோ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.01.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.08.28 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.08.21 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இருபத்தொரு இலட்சத்து இருபத்துமூவாயிரத்து முன்னூற்று நாற்பத்திரண்டு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 21,23,342.46) 2008, நவெம்பர் 26 ஆந் திகதி முதல் இல. 823 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை பத்தொன்பது இலட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்று நாற்பத்தைந்து ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 19,31,745.69) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினெட்டு தசம் ஐந்து வீதம் (18.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப் பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், பிட்டிகல் கோரளே தெற்கு கம்மல்பத்துவின் வென்னப்புவ கிராமத்தில் அமைந்த "கொஸ்காஹாவத்த" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரன்ஜித் யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, மே 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 7559 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : கே. டேவிட் இம்மானுவேல் பெரேராவிற்கு சொந்தமான காணி மற்றும் புல்கெனிசியஸ் பெரேராவிற்கு சொந்தமான காணி ; கிழக்கிற்கு : முன்னர் சாவியல் பெரேராவின் காணி ; தெற்கிற்கு : டபிள்யூ. எம். டெரன்ஸ் ரொஹான் கிரிஷாந்த பெர்ணாண்டோவிற்கு சொந்தமான காணி ; மற்றும் மேற்கிற்கு : டபிள்யூ. எம். டெரன்ஸ் ரொஹான் கிரிஷாந்த பெர்ணாண்டோவிற்கு சொந்தமான காணி, வீதி மற்றும் கே. டேவிட் இம்மானுவேல் பெரேராவிற்கு சொந்தமான காணி. இவ்வெல்லை களுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபத்தாறு தசம் இரண்டு

பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 26.2பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள் பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் இல. 7559 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாரவில காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 90/242 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட காணியின் மேற்கு எல்லையினூடாக வீதி ஒதுக்கத்தின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிக்கும் மார்க்க உரிமைகள் உடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-1008/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 0019 5002 4719-ஈ. எஸ். ஆர். ஜினதாச

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2009.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.01.28 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.01.18 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றாறாயிரத்து ஐந்நூற்று முப்பத்துமூன்று ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 19,96,533.13) 2009, ஓகத்து 18 ஆந் திகதி முதல் இல. 971 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை பத்தொன்பது இலட்சத்து அறுபத்தையாயிரத்து எழுநூற்றிருபத்திரண்டு ரூபா அறுபத்துநான்கு சதம் (ரூ. 19,65,722.64) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தைந்து வீதம் (25%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி பி. ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலேயின் பல்லேபத்துவையில் கெஸ்பேவை பிரதேச சபை எல்லைகளுக்குள், மாம்பெ கிராமத்தில் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. டீ. ஜீ. வீரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, பெப்புருவரி 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 6472 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : எஸ். பீ. சிரில் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வீதி; கிழக்கிற்கு : வீதி மற்றும் கொட்டாவை வீதி; தெற்கிற்கு : எல்லமுல்லகே டொன் பெட்ரிக் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி மற்றும் கொட்டாவை வீதி, மற்றும் ; மேற்கிற்கு : எல்லமுல்லகே டொன் பெட்ரிக் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24பே.) அல்லது 0.0607 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி, உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரதேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 6472 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்த-நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 3156/79 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :-

மேற்கூறப்பட்ட மாம்பெ கிராமத்தில் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. ஏ. பூஹுரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1980, யூலை 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 2351 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 6BX எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : எஸ். பீ. சீரில் பெரேரா உரிமம் கோறும் அதே காணியின் ஒரு பகுதி மற்றும் வீதி ; வடகிழக்கிற்கு : லொட் 6BY; தென்கிழக்கிற்கு : தூவவத்த வீதி மற்றும் ; தென்மேற்கிற்கு : எல்லமுல்லகே டொன் பெட்ரிக் பெரேரா உரிமம் கோரும் அதே காணியின் ஒரு பகுதி ஆகிய இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24பே.) அல்லது 0.0607 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரதேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2351 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-1008/2

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 1022 5305 3222-டீ. பீ. பத்மபெரும, டீ. ஜீ. சீ. பத்மபெரும மற்றும் டீ. சீ. ஆர். பத்மபெரும

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.10.22 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.10.23 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.10.16 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒன்பது இலட்சத்து இரண்டாயிரத்து நூற்றுநான்கு ரூபா நாற்பது சதம் (ரூ. 9,02,104.40) 2008, பெப்புருவரி 29 ஆந் திகதி முதல் இல. 2728 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை எட்டு இலட்சத்து எழுபத்தையாயிரத்து அறுநூற்றிருபத்தேழு ரூபா தொண்ணூற்றுமூன்று சதம் (ரூ. 8,75,627.93) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி மு. ப. 9.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலேயின் உடுகாஹா பத்துவின் சீதாவக்க பிரதேச சபை எல்லைகளுக்குள் (ஹங்வெல்லை உடுகாஹாபத்து உப அலுவலகத்தின்) கலுஅக்கலையில் அமைந்த கலுஅக்கல லபுகம வீதி, வரிமதிப்பீட்டு இல. 69/ஏ ஐக் கொண்ட ''மூனமலே எஸ்ட்டேட் எனும் சென். ரீட்டாஸ் எஸ்ட்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. டீ. ஜீ. வீரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, மே 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 1927 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 18 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : லொட்கள் 42 மற்றும் 17 ; கிழக்கிற்கு : லொட்கள் 17 மற்றும் 19 ; தெற்கிற்கு : லொட்கள் 19 மற்றும 43 ; மற்றும் மேற்கிற்கு : லொட்கள் 43 மற்றும் 42. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் சைபர் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.04பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியும் அங்கு அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன், அதற்கண் அமைந்த அனைத்தும். சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1927 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N 151/244 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இல. 1927 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 13 மற்றும் 43 என குறிப்பிடப்பட்ட வீதிகளுக்கான ஒதுக்கங்களின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-1008/3

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. : 1019 5013 8522-கே. பீ. எம். வீ. டீ. எஸ். பெர்ணாண்டோ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2010.01.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.04.01 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.03.16 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எழுநூற்றொரு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 4,82,701.13) 2009, நவெம்பர் 28 ஆந் திகதி முதல் இல. 702 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை மூன்று இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து இருநூற்றைம்பத்துமூன்று ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 3,38,253.21) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி பி. ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளையின் உடுகாஹா பத்துவின் ஹோமாகம பிரதேச சபை எல்லைகளுக்குள், சியம்பலாகொடையில் அமைந்த ''கொரக்ககாஹாகனத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். ஐ. குணசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, திசெம்பர் 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 8557 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 6 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : வீதி ; கிழக்கிற்கு : லொட் 8 ; தெற்கிற்கு : லொட் 05 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 7 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம்

*பத்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சஸ்கள் (ஏ. 0றூ. 10.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 8557 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப் பதிவகத்தில் பரிமானம்/பக்கம் N 350/210 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*7-1008/4*

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0025 5002 7022-டபிள்யூ. பி. எஸ். எல். வித்தாரண

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009, மாச்சு 13 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.03 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.08.25 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒன்பது இலட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்றெழுபத்தெட்டு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 9,30,678.46) 2009, சனவரி 6 ஆந் திகதி முதல் இல. 38284 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை எட்டு இலட்சத்து பதினையாயிரத்து அறுநூற்றெண்பத்துமூன்று ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 8,15,683.63) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவேண்டுமென 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக 2010.08.27 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

*மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை வடக்கு, உடுகொட, உடஸ்சியபத்துவின் கோஹோலன்வெலவில் அமைந்த எல்ஹேன கனத்தை கெட்டகலன்கஹாமுல என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஈ. வி. சிறிசுமண என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 4685 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 பி எனக் குறிப்பிடப்பட்ட காணி விஸ்தீரணம் மூன்று றூட் பதின்மூன்று பேர்ச்சஸ்களாகும் (0ஏ. 3றூ. 13பே.) மற்றும் இக்காணியின் எல்லைகளாவன- வடகிழக்கிற்கு : தம்புள்ளை முதல் மாத்தளை வரையான பாதை ; தென்கிழக்கிற்கு : தற்போது நந்தா சில்வாவினால் உரிமைகோரப்படும் தம்மன்ஹேனவைப் பிரிக்கும் வயல் மற்றும் இயற்கை (தாவர) வேலி; தென்மேற்கிற்கு : தற்போது பார்னி வீரசிங்ஹவினால் உரிமைகோரப் படும் எல்ஹேன கனத்த ஐ பிரிக்கும் வயர் மற்றும் இயற்கை (தாவர) வேலி மற்றும் ; வடமேற்கிற்கு : வரைபட இல. 4685 இன் லொட் ஏ அங்கு அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூடியது மற்றும் பரிமாணம்/பக்கம் D 477/214 இன் கீழ் மாத்தளை காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*7-1010/1*

---

**சம்பத் வங்கி லிமிட்டெட்**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0007 1001 7182-ஸ்ட்டார் ட்ரேடார்ஸ்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2006.06.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.11.27 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.11.24 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான குறிப்பிடப்பட்ட இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) 2006, பெப்புருவரி 1 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித்தீர்க்கும் திகதிவரை இருபது இலட்சம் ரூபா (ரூ. 20,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2010.08.27 ஆந் திகதி பி. பி. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என சம்பத் வங்கி லிமிட்டெட் இத்தால் தீர்மானிக்கின்றது.*

**அட்டவணை**

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தின் கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள், மாபனவத்துர அமைந்த வரிமதிப்பீட்டிலக்கம் 72A*

''கெரெவ்கஹாஹேன தேன்வத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிசில் டூல்வல என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, யூலை 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 1949 எனும் வரைபடத்தில் லொட் 1B மற்றும் 2001, ஓகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2518 எனும் வரைபடத்தில் லொட் 1 உம் அவ்விரண்டு வரைபடங் களிலும் காட்டப்பட்ட உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. யட்டவர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1970, யூன் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 1203A எனும் வரைபடத்தில் லொட் 1 இன் ஒரு பகுதியான) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சிசில் டூல்வல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001, ஓகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2453 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : முன்னர் விற்கப்பட்ட அக்காணியின் ஒரு பகுதி ; கிழக்கிற்கு: மாபனவத்தூர பெசேஜ் ; தெற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. யட்டவர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1970, யூன் 01 ஆந் திகதியிடப்பட்ட இல. 1203A எனும் வரைபடத்தில் லொட் 2 ; மற்றும் மேற்கிற்கு : ஆறு எனும் இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் பதின்மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 13பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2453 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 353/205 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-1010/3

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1045 5304 6109-எம். எஸ். டீன்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் 2008.04.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.25 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.25 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஆறு இலட்சத்து பதினோராயிருத்து நூற்றுத்தொண்ணூற்றொன்பது ரூபா தொண்ணூற்றுமூன்று சதம் (ரூ. 6,11,199.93) 2008, சனவரி 22 ஆந் திகதி முதல் இல. 2654 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஐந்து இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து இருநூற்றறுபத்தெட்டு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 5,69,268.81) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெற்கு அலுத்குரு கோரலேயின் அம்பத்தலென் பாஹால கொட்டிகாவத்தை-முல்லேரியாவை பிரதேச சபை எல்லைகளுக்குள், மெகொட கொலொன்னாவையில் அமைந்த கொலன்னாவை வீதி வரிமதிப்பீட்டு இல. 94சீ (ஒரு பகுதி) ஏற்ற ''ஹிரிவல கும்புர'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எல். என். பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, திசெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 2565 எனும் தொடர் மாடி வரைபடத்தில் காட்டப்பட்ட பகுதி வீட்டுத் தொடர் மாடிக் கட்டிடத்தின் தொகுதி 1 இற்கு எல்லையாக- வடக்கிற்கு : சீஈ1 இன் இத்தொகுதியைப் பிரிக்கும் சுவர் மற்றும் 6 மீ. அகல வீதி ; கிழக்கிற்கு : தொகுதி 2 இலிருந்து இத்தொகுதியைப் பிரிக்கும் சுவரின் மையம் ; தெற்கிற்கு : சீஈ3 இன் இத்தொகுதியைப் பிரிக்கும் சுவர் ; மேற்கிற்கு : சீஈ3 இன் இத்தொகுதியைப் பிரிக்கும் சுவர், இல. 2390 எனும் வரைபடத்தில் லொட் ஏ எஞ்சிய பகுதி மற்றும் சீஈ 1 உச்சி (ஸெனித்) கொங்றீட் கூரையின் மையம் மற்றும் பார்வையிடுபவரின் எதிர்த்திசையில் (அடிப்பகுதி) நுனியில் (நடிர்) கட்டிடத்தின் தரை ஆகிய எல்லைகளுக்குள் அமைந்ததன் விஸ்தீரணம் நாற்பத்தேழு தசம் எட்டு ஆறு சதுர மீட்டர்கள் (47.86 சதுர மீட்டர்கள்) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கீழே காட்டப்பட்ட பொது அடிப்படை வசதிகளில் 7.95% பகுதியுடன் படுக்கையறைகள் 2, வரவேற்பறை, சமையலறைக்காக வடிவமைக்கப்பட்ட 2 இடவசதிகள் மற்றும் மலசலகூடம். இத்தொகுதி 1 இற்குரியதுடன் அது பரிமாணம்/பக்கம் கொன் பி4/38 இன்கீழ் கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**அடிப்படை பொது வசதிகள் :**

1982 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) 12 ஆம் பிரிவின் திருத்தப்பட்டவாறான 1973 இல் 11 இன் தொகுதி வீடுகள் உரிமை சட்டவாக்கத்தின் 26 ஆவது பிரிவினால் வழங்கப்பட்டதற் கமைவாக தொடர் மாடி வீடமைப்புத் தொகுதி சட்டரீதியான பொது வசதிகள்.

(அ) தொடர் மாடி வீடமைப்புத் தொகுதி சொத்திற்குள் அடங்கும் மற்றும் சொந்தமான காண், சமையலறை, எல்லைச் சுவர்கள் உட்பட்ட கட்டிடம் நிறுவப்பட்ட காணி

(ஆ) இக்கட்டிடத்தின் தூண்கள், உத்திரங்கள், கீழ் உத்திரங்கள், தாங்கிகள், பிரதான சுவர்கள் மற்றும் கூரைக்கான அஸ்த்திவாரம்

(இ) மின்சாரம், தொலைபேசி, நீர்க்குழாய்கள், தண்ணீர் தாங்கிகள், நீர் சம்ப், நீர்த்தாங்கி, சாக்கடை வடிகால்கள் மற்றும் மேன் ஹோல் போன்ற பொது சேவைகளுக்கான அமைப்புகள்

(ஈ) இச்சொத்தின் நீண்டகால உறுதிக்கு, பராமரிப்பிற்கு மற்றும் பாதுகாப்பிற்கு சாதாரண பொது பாவனைக்கு தேவைப்படும் மற்றும் அனைத்து பகுதிகளும் மற்றும் வசதிகளும்.

அடிப்படை பொது வசதிகளை தெளிவுபடுத்தல் மற்றும் விபரித்தல் :-

சீஈ1 (அ) தரைப் பிரதேசம்
(ஆ) அனைத்துப் பகுதிகளுக்கும் காற்றோட் டத்திற்காக திறந்த பகுதி
சீஈ2 (அ) தரைப் பிரதேசம்
(ஆ) அனைத்து பகுதிகளுக்கும் காற்றோட்டத் திற்காக திறந்த பகுதி
(இ) அனைத்து பகுதிகளுக்குமான அண்மைய பொது பிரவேச வழி
சீஈ3 (அ) கொலன்னாவை வீதி மற்றும் ஆற்றினூடாக திறந்த பகுதி மற்றும் காணி
(ஆ) அனைத்து பகுதிகளுக்கும் காற்றோட்டத் திற்காக திறந்த பகுதி
சீஈ4 (அ) பல்க்கனி
(ஆ) தொகுதி 5 மற்றும் 12 இற்கான அண்மைய பொது பிரவேசம்
சீஈ5 (அ) பல்க்கனி
(ஆ) தொகுதி 9 மற்றும் 12 இற்கான அண்மைய பொது பிரவேசம்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-1011/1

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0050 1000 2224-இன்ட்டர்லிங்க் டெக்னொலொஜீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2007.08.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.25 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.18 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினெட்டு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து முந்நூற்றைம்பத்தெட்டு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 18,22,358.85) 2007, மே 29 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித்தீர்க்கும் திகதிவரை ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா (ரூ. 7,50,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) மேலும் ஒரு இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூ. 1,55,500) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான ஷொக்மன் அன்ட் சமரவிக்கிரம மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி பி. ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவின் மொரட்டுவை, கட்டுகுருந்தை, மாஹானுகஸ்செவன சென்டர் வீதியில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 14 ஐ ஏற்ற "மாதன்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எஸ். சீ. வித்தானகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, யூன் 22 ஆந் திகதி மற்றும் 1998, யூலை 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 437 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : ஒஸ்ட்டின் ரெஜி பெர்னாண்டோவின் மாஹானுகஸ்செவன மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 21 ஐ ஏற்ற வளவு மற்றும் பன்சலை வளவு ; கிழக்கிற்கு : அதே காணியின் லொட் 2 ; தெற்கிற்கு : அதே காணியின் லொட் 3 ; மற்றும் மேற்கிற்கு : மெத மாவத்தை. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் எட்டு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.80பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 437 எனும் வரைபடத்திற்கு அமைவாக கல்கிஸ்ஸை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 2913/32 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

7-1011/2

---

**ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. – களுத்துறை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை

**பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரிபற்று, மஹர பிரதேச**

***சபையின் நாரம்மல உப அலுவலக எல்லைகளுக்குள், கொனஹேன கிராமத்தில் அமைந்துள்ளதும் "கொனஹெனவத்தை (கொனே ஹேன எஸ்ட்டேட் இன் பாகம்)" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. என். லீலாரட்ன அவர்களால் தயாரிக்கப்பட்டு 2003, திசெம்பர் 09 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 311/2003 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 6 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து அத்துடன் வழியுரிமையுடனும் சேர்த்து ஏலவிற்பனை***

***(காணியின் விஸ்தீரணம் : ஒரு றூட் இருபத்துமூன்று தசம் நான்கு சைபர் பேர்ச்சுக்கள் (0ஏ. 1றூ. 23.40பே.))***

*(ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இன் சார்பில் பாணந்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. வீ. என். டபிள்யூ. பெரேரா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008, பெப்புருவரி 18 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 2290 மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ள கடப்பாடுடையவர்களான ராமநாயக்க கங்கானம்லாகே ஷமில சந்திரகாந்தி ராமநாயக்க மற்றும் அலவத்து கங்கானம்லாகே தொன் ஹிரன் நிஷாந்த பெரேரா ஆகியோருக்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- உட்பிரவேசிக்க இலகுவான வழி கடவத்தையிலிருந்து கண்டி வீதி வழியே கொன்ஹேன சென்று பண்டாரநாயக்க வீதிக்குத் திரும்பி ஏறக்குறைய 1/2 கிலோ மீற்றர் செல்ல இவ்வாதனத்தை அடையலாம்.

ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க இன் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், மேலே விவரிக்கப் பட்டுள்ள ஆதனத்தை 2010, ஓகத்து 20 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- 2010, மே 26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2010, யூன் 1 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகாரசபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, தலைமை அலுவலகம், ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க., பிரதம பொது முகாமையாளர்" அவர்களிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 011-2661821, 2661815.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்
மற்றும் விலைமதிப்பிடுநர்.

*அலுவலகம் :*
இல. 25பி, பெல்மொண்ட் தெரு,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-5756356, 071-8760986.

*இல்லம் :*
இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. : 011-2419126.

7-1013

---

**ஹற்றன் நஷனல் வங்கி ப.வ.க. – நிட்டம்புவை கிளை**

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

